**ஒபெக் நிதியளிக்கப்பட்ட மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2023**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவுசெய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்தோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2026 மே 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 03 இன் பிரகாரம் பெல்லென - மொராகலை வீதியின் நிர்மாணப்பணிகள் 2020 செப்தெம்பர் 06 இல் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், இதன் பெறுமதி சிவில் பணிகளுக்கு மாற்றப்படாமல் இன்னும் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே சிவில் பணிகள் அந்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 1,293.72 | இணங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றில் குறித்த பெறுமதியை சிவில் பணிகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடுவெல மற்றும் அகலவத்தை வீதிகளுக்காக காணி சுவீகரிப்பிற்கான வட்டித் தொகை ரூபா 29.1 மில்லியன் ஆகும். எனினும், 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில், முன்னைய ஆண்டிற்காக ரூபா 66.8 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 37.7 | இணங்கப்பட்டது. கையிலுள்ள உறுதிச்சீட்டுக்களின் அடிப்படையில் இநிதிக்கூற்றுக்களில் வட்டித் தொகையை அட்டுறுவாக குறிப்பிட்டுள்ளோம். நடைமுறையில், கொடுப்பனவுகளிற்காக DS அலுவலகத்தில் இருந்து உறுதிச்சீட்டுக்கள் பெறப்படும் வரை சரியான எண்ணிக்கையைப் பெறுவது சவாலானதாகும். எனினும், எதிர்காலத்தில் சரியான தொகையின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுப்போம். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை சுவீகரித்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாகக் காரணமான கடன்பெறுதல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு NSB கடன் தொகையுடன் தொடர்புடைய கடன்பெறுதல் | 119.38 | இணங்கப்பட்டது. இந்தக் கடனை வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) கடனாகப் பெற்றது, செயற்திட்டமல்ல. இதன் விளைவாக, கடன் பெறுதல் கிரயம் RDA இன் பொறுப்பாகும். செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டு RDA இடம் ஒப்படைக்கப்பட்டதும், அவர்கள் செயற்திட்டத்தின் கிரயத்தையும் அதனுடன் | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் SLPSAS உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிரயத்தை மூலதனமாக்கியிருக்கவில்லை. | | தொடர்புடைய கடன் பெறுதல் கிரயங்களையும் மூலதனமாக்குவார்கள். எனவே, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதம கணக்காளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம், 2024-02-05 ஆம் திகதிய எம்ரீ&எச்/எச்டபிள்யூவை/ஏசீசீ/18/2024/14 ஆம் இலக்க கடிதம் மூலம் செயற்திட்டம் RDA இடம் ஒப்படைக்கப்படும் வரை கடன் பெறுதல் கிரயங்களை அதன் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தியுள்ளது. | |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பிற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 190.09 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டது, காணி பிரிவால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான தகவல்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி சுவீகரிப்பிற்கான வட்டி ரூபா 282.16 மில்லியன் ஆகும். எனவே, அந்த தொகைகளுக்கு இடையே ரூபா 92.07 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 92.07 | இணங்கப்பட்டது. நாங்கள் ஏற்கனவே அனுப்பிய பட்டியலில் எண்கணித பிழை இருப்பது கவனிக்கப்பட்டது, எனவே திருத்தப்பட்ட பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் சரியான தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| இல. | விபரம் | தொகை ரூபா. மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்த நான்கு ஆண்டுகளில் விளம்பரம், அளவிடல் வேலை, மண்சரிவு ஆய்வு, நடைபாதை வடிவமைப்பு மற்றும் சுற்றாடல் ஆலோசனை செலவினங்கள் ஆகியவற்றிலிருந்து இரண்டு பெறவேண்டிய மீதிகள் ரூபா 16.96 மில்லியன் அறவிடுவதற்கு செயற்திட்டம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | 16.96 | 4 ஆண்டுகள் | இணங்கப்பட்டது. I/C/A ஐ OFID – IV உடன் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, தற்போது, ரூபா 16.96 மில்லியனில் ரூபா 6.0 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. மிகுதி 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் தீர்ப்பனவு செய்யப்படும். | செலுத்த வேண்டியவையை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டச் செயற்பாட்டின் வெளியீடு மற்றும் விளைவை அளவிடுவதற்கு KPIs நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் நலன்களின் அளவை கணக்காய்வில் சரிபார்க்க முடியவில்லை. | இணங்கப்பட்டது. கண்காணிப்புக்காக KPIs ஐ நிறுவுவதன் முக்கியத்துவம் உணரப்படுகிறது, மேலும் செயற்திட்ட நலன்களைக் கண்காணிப்பதற்கு KPIs ஐ நிறுவுவதற்கு PMU இற்கு தெரிவிக்கப்படும். மேலும், வீதியை பராமரிக்கும் RDA மூலம் நலன்களை கண்காணிக்க வேண்டியது அவசியமாகும். | செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் செயற்திட்ட பணிப்பாளர் KPIs ஐ இனங்காண வேண்டும். |
| (ஆ) | 04 தேசிய வீதிகளில் 25.8 கிலோமீற்றர் புனரமைப்புப் பணிகள் 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. 2015 யூன் 26 இல் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் காணி சுவீகரிப்பு செயன்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 02 ஒப்பந்தப் பொதிகளின் புனரமைப்புப் பணிகள் 2 ½ வருடங்கள் கடந்த பின்னர் ஆரம்பிக்கப்பட்டு செயற்திட்ட கிரயம் ரூபா 645 மில்லியனால் அதிகரித்திருந்தது. கடுவெல முதல் அத்துருகிரிய வரையிலான வீதியின் மிகுதிப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் கடனுக்கான மிகுதி ஒதுக்கீட்டில் ஆரம்ப பணியின் நோக்கெல்லையில் இல்லாத ஒருகொடவத்தை-அம்பத்தளை வீதியில் உள்ள 9/1 ஆம் இலக்க பாலத்தை புனரமைப்பதற்கான பெறுகை செயன்முறைகளை செயற்திட்டம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. மேலும், ஒப்பந்தப் பொதி - I இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வல்கம-அத்துருகிரிய வீதியின் 1.25 கிலோமீற்றர் புனரமைப்புப் பணிகள் பின்னர் காணி சுவீகரிப்புச் செயன்முறையில் உள்ள சிக்கல்கள் காரணமாக செயற்திட்ட பணிகளின் நோக்கெல்லையிலிருந்து நீக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. பொதி I மற்றும் பொதி II இற்கு முறையே 2018.01.29 மற்றும் 2017.10.05 இல் நிர்மாணம் தொடங்கியது. ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 9/1 ஆம் இலக்க பாலத்தை மேம்படுத்துவதற்கு மிகுதி கடன் தொகையை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | யெற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லையை பூர்த்திசெய்வதை செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |

## 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 8.13.4 ஆம் இலக்க உட்பிரிவு | அளவைப் பட்டியல்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிபுணர்களும் BOQ இல் சேர்க்கப்பட்டுள்ள அளவுகள் முடிந்தவரை சரியாக இருப்பதை உறுதிப்படுத்தி, 5 சதவீதத்திற்கு மேற்படாமல் அளவைக் குறைப்பதற்கு அனுமதிக்க வேண்டும். எனினும், ஆரம்ப கட்டத்தில் BOQ இல் உள்ள மொத்த அளவுகளை செயற்திட்டத்தால் கண்டறிய முடியவில்லை. எனவே, செயற்திட்டமானது பீ 174 கடுவெல – அத்துருகிரிய வீதிக்கான முரண் கட்டளைகளை பின்னர் வழங்கியிருந்தது. ஒப்பந்தத்தின் மொத்த கிரயத்தில் 43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயற்திட்டமானது ரூபா 453 மில்லியன் கூட்டுமொத்தமான முரண்களை ஏற்படுத்தியுள்ளது. | ஆரம்ப BOQ இற்கும் திருத்தப்பட்ட BOQ இற்கும் இடையே உள்ள வேறுபாடு ரூபா 453 மில்லியன் (ரூபா 1,518 - 1,065 மில்லியன்) ஆகும். எனினும், ரூபா 45.8 மில்லியன் தொகையான 53 முரண் கட்டளைகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. வேறு சில காரணங்களால் செயற்திட்ட கிரயம் கணிசமாக அதிகரித்துள்ளது. முதலாவதாக, செயற்திட்டத்தின் நீண்ட காலம், குறிப்பாக விலைப்பட்டியல் இல. 01 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, செலவினங்கள் அதிகரிப்பதற்கு (ரூபா 72.3 மில்லியன்) பங்களித்திருந்தது. மேலும், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கணிசமான விலை உயர்வுகளால் (ரூபா 119.5 மில்லியன்) இந்த செயற்திட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கொடுக்கப்பட்ட EOTs காரணமாக கிரய கோரிக்கைகள் (ரூபா 239 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டுள்ளன. | முரண் கட்டளைகளை பரிந்துரைப்பதற்கு முன்னர் PMU பெறுகை நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பெறுகை கையேட்டின் பிற்சேர்க்கை 14 | செயற்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீட்டில் உள்ள உருப்படிகளையும் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 55 இன் கீழ் உள்ள உருப்படிகளையும் ஒப்பிடும் போது ரூபா 247 மில்லியன் பெறுமதியான 43 வேலை உருப்படிகள் முழுமையாக வரவில்லை என அடையாளம் காணப்பட முடிந்தது. மேலும், ரூபா 27 மில்லியன் பெறுமதியான 26 வேலை உருப்படிகள் அங்கீகரிக்கப்பட்ட BOQ அளவு வரம்புகளை மீறியதாக அடையாளம் காண முடியும். இதன் விளைவாக, செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீடு சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சில உருப்படிகள் BOQ அளவை விஞ்சியிருந்தன. பொதுவாக, பொறியியல் மதிப்பீடுகள் முன்னைய அனுபவங்கள் மற்றும் வீதியின் காட்சி அவதானிப்புக்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. ஆரம்ப கட்டத்தில் கணிக்க முடியாத மற்றும் எதிர்பாராத காரணங்களால் உருப்படிகளின் சில அளவுகள் வேறுபடலாம். | BOQ இற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் தேவையான BOQ உருப்படிகள் மற்றும் நியாயமான BOQ விலைவிகிதங்களின் நிறைவு குறித்து செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை 2015 யூன் 26 இல் ஐ.அ.டொலர் 17 மில்லியனிற்கு கைச்சாத்திடப்பட்டதுடன் 2019 யூன் 30 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக, கடன் இறுதி திகதி 2026 மே 10 வரை நிதியளிப்பு முகவரால் பலமுறை நீட்டிக்கப்பட்டது. கடன் மீள்கொடுப்பனவு 2020 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தக் கடன் வசதிகளில் 13 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 2.28 மில்லியனை செயற்திட்டத்தால் வழங்க முடியவில்லை. | இணங்கப்பட்டது. காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டம் தாமதமாகியது. எனினும், ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் உள்ள 9/1 ஆம் இலக்க பாலத்தை புனரமைப்பதற்கு மிகுதி கடன் ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட பணிப்பாளர் செயற்திட்டத்தின் நோக்கெல்லையுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் ஆலோசனை உடன்படிக்கை 2018 மார்ச் 08 இல் ரூபா 147.79 மில்லியனுக்குத் தொடங்கப்பட்டதுடன் ஆரம்ப பூர்த்தி செய்தல் திகதி 2019 யூலை 28 ஆகும். எனினும், செயற்திட்டத்தின் நிர்மாண பணிகள் தாமதமானதால், ஆலோசனைக் கட்டணம் ரூபா 299.36 | இணங்கப்பட்டது. உருப்படி சீ (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு, தாமதமாக தளம் கையேற்கப்பட்டதால் ஒப்பந்த காலம் நீட்டிக்கப்பட்டது. அதன் பிரகாரம், குறைந்தபட்ச உள்ளீட்டு | செயற்திட்ட பணிப்பாளர் தேவையற்ற காலதாமதம் மற்றும் கிரயம் மீறப்படுதலைத் தவிர்ப்பதை உறுப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்தல் திகதி 2023 சனவரி 31 வரை பலமுறை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் காரணமாக ஆலோசனை ஒப்பந்தத்தின் மொத்த கிரயத்தில் 102.57 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படத்தும் ரூபா 151.59 மில்லியனை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. மேலும், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் செயற்திட்ட கிரயத்தை மீறுவதை பாதகமாகப் பாதித்தமை அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாட்டுடன் நிர்மாண மேற்பார்வைக்காக ஆலோசனை சேவைகளும் நீடிக்கப்பட்டன. | |
| (இ) | கடுவெல – அத்துருகிரிய வீதியின் 9.5 கிலோமீற்றர் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர் ரூபா 1,065 மில்லியன் கிரயத்தில் 2018 சனவரி 29 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 யூலை 28 இல் பூர்த்தி செய்யப்படவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்ததாரருக்கு 841 நாட்கள் கால நீடிப்பு வழங்குவதன் மூலம் 2023 ஆகஸ்ட் 29 வரை செயற்திட்டத்தால் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்ததாரர் 841 நாட்கள் கால நீடிப்புக்கான கிரயம் தொடர்பாக ரூபா 311 மில்லியனை கோரியுள்ளமையும், ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலை கருத்தில் கொள்ளாமல் செயற்திட்டமானது அந்தக் கோரிக்கையை அங்கீகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இது கணக்காய்வில் சிக்கல் நிறைந்த பிரச்சினையாக இருந்தது. | இணங்கப்படவில்லை.<br>காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்தம் முக்கியமாக தாமதமாகியது. மேலும், பயன்பாட்டு மாற்ற தாமதங்களும் இத் தாமதத்திற்கு கணிசமாக பங்களித்தன.<br><br>பொறியியலாளரின் மதிப்பீட்டின் பிரகாரம், தளம் பொறுப்பேற்கப்படாததால் உரிமை கோரிக்கைக்கு ஒப்பந்ததாரருக்கு உரித்துண்டு. | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் கால நீடிப்பு, காரணங்களின் சரியான தன்மை மற்றும் விலை ஏற்றத்தின் பொருந்தக்கூடிய தன்மை ஆகியவற்றைப் பரிந்துரைப்பதற்கு முன்னர் பொறியியலாளர் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பொதி OFID-3/1 ஒப்பந்ததாரர் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களை விடுவித்து கொடுப்பனவிற்காக சமர்ப்பித்துள்ள போதிலும் இந்த செயற்திட்டம் தாமதத்துடன் இந்தக் கொடுப்பனவுகளைத் தீர்த்திருந்தது. இதன் விளைவாக, ஒப்பந்ததாரர் தாமதமான காலத்திற்கு ரூபா 18 மில்லியன் வட்டியை கோரியிருந்தார். ஒப்பந்ததாரர் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் செயற்திட்ட கிரயத்தை மீறுவதை பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது.<br>DAB ஆனது நீடிப்பு கிரயங்களைச் செலுத்துவதற்கு பரிந்துரைத்தது, மேலும் அதைச் செலுத்துவதற்குப் போதுமான ஒதுக்கீடு கிடைக்கவில்லை, இது BOQ ஐ திருத்துவதற்கு வழிவகுத்ததுடன் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை மேலதிக காலம் மற்றும் கிரயத்திற்கு வழிவகுத்தது.<br>அதன் பிரகாரம், | நட்டங்களை குறைப்பதற்கு PMU தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டது, மேலும் ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் 14.8 வது உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தாமத கொடுப்பனவு கட்டணங்களைக் கோரினார். | |
| (உ) | ஒப்பந்தத்தின் விபரக்குறிப்புக்களின் 128 மற்றும் 129 ஆம் உட்பிரிவுகளின் பிரகாரம் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஒப்பந்ததாரரிடம் கையேற்பு சான்றிதழை வழங்கும் திகதியில் மீளளிக்கப்பட வேண்டியதுடன் அளவை உபகரணங்களும் ஒப்பந்தத்தின் முடிவில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கள ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கணக்கெடுப்பு உபகரணங்களுக்காக மொத்தமாக ரூபா 18.5 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலுத்தியுள்ளது. சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு மேலதிக நலன்களை ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் (RDA) இருக்கும் ஆய்வுகூடம் மற்றும் அளவை உபகரணங்கள் தேவைகளை விட அதிகமாக இருப்பதால், செயற்திட்ட முடிவின் மூலம் புதிய உபகரணங்களைப் பெறுவது தேவையற்றதாகிறது. எனவே, குறிப்பிட்ட விபரக்குறிப்புக்களின் (தொழில்தருநரின் தேவைப்பாடு) 128 & 129 உட்பிரிவு தொழில்தருநரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், போட்டித் தன்மையில் கேள்விகள் கோரப்படுவதால் கேள்வி விலை குறைக்கப்பட்டதெனக் கருதலாம். | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU ஆனது TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் (FIDIC – 1999) 42 ஆம் இலக்க உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், செலாற்றல் பிணைக்கான செலவினத்திற்காக செயற்திட்டத்தினால் ரூபா 11.79 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டமானது ஒப்பந்ததாரருக்கு ரூபா 5.67 மில்லியன் BOQ தொகையை விஞ்சி ரூபா 6.13 மில்லியனை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்படவில்லை. ஒப்பந்த நிபந்தனைகளின் (COC) 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் கேள்விக்கான பின்னிணைப்பில் தொகை மற்றும் நாணயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால், ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றிற்கு முரணாக, கேள்வி ஆவணங்களின் கேள்விக்கான பின்னிணைப்பில் தொகை குறிப்பிடப்படவில்லை. | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்ளுமாறு PMU ஆனது TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | தளம் கையேற்பதில் தாமதம் ஏற்பட்டதால், ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஐசீபீ/ஓஎவ்ஜடி-03/02 பொதிக்கு 431 நாட்களுக்கான கால நீடிப்பு TEC ஆல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நீடிப்பு மற்றும் பூர்வாங்க பொதுச் செலவுக்காக செயற்திட்டத்தினால் ரூபா 268 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனவே செயற்திட்ட கிரயம் ரூபா 268 மில்லியனால் அதிகரிக்கரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தளம் கையகப்படுத்தப்படாததால், ஒப்பந்தக்காரருக்கு நீடிப்பு கிரயங்களுக்கு உரித்துண்டு. | நிர்மாணங்களை தொடங்குவதற்கு முன்னர் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு PMU நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மேல் மாகாணத்தில் 27 கிலோமீற்றர் முன்னர் தெரிவுசெய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளை தரமுயர்த்துதல், மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், B174 கடுவெல – அத்துருகிரிய வீதிப் பகுதியை 0+000 முதல் 9+500 கிலோமீற்றர் வரை மேம்படுத்துவதற்கும் புனரமைப்பதற்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 0+000 முதல் 9+000 கிமீ வரையிலான பகுதி 2023 மார்ச் 13 இல் தொழில்தருநரால் கையேற்கப்பட்டது. எனினும், 9+000 முதல் 9+500 வரையிலான பகுதி கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது, மேலும் வெலே சந்தி மற்றும் அத்துருகிரிய சந்தி ஆகியவை செயற்திட்டத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அதுருகிரிய சந்தியில் காணி சுவீகரிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடுவெல – அத்துருகிரிய வீதியின் கடைசி 500m (9+000km – 9+500km) வீதிப் பகுதி ஆரம்பிக்கப்படவில்லை.<br><br>1992 ஆம் ஆண்டு அத்துருகிரிய சந்தி மேம்பாட்டிற்காக காணி சுவீகரிக்கப்பட்டது, அதற்கான இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை. கடுவெல – அத்துருகிரிய வீதிக்கான (தற்போது) LAQ பணிகளை ஆரம்பிக்கும் போது இந்த நிலைமை உணரப்பட்டது. இதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து, ஆரம்ப சுவீகரிப்பின் கொடுப்பனவு தீர்ப்பனவு செய்யப்படும் வரை அந்த தள உடமையை வழங்க சம்மதிக்கவில்லை. | செயற்திட்ட நோக்கெல்லையின் பிரகாரம் PMU செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஐ) | பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 7169 தொண் அஸ்பால்ற் கொங்கிறீட் இடப்பட வேண்டும் என மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் முடிவில் 4,847.56 தொண் அஸ்பால்ற் கொங்கிறீட் இடுவதற்கு உண்மையில் பயன்படுத்தப்பட்டது, மேலும் 0+000 முதல் 1+600 கிமீ வரையிலான பகுதி அஸ்பால்ற் இடும் போது கொங்கிறீட் | இணங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் 0+000 கிமீ முதல் 1+600 கிமீ வரை அஸ்பால்ற் கொங்கிறீட் இடுதலை பூர்த்திசெய்வதற்கு திட்டமிட்டார், ஆனால் ஏற்கனவே உள்ள குழாய்களில் இருந்து தண்ணீர் கசிவு காரணமாக வேலை தாமதமானது. ஆனால், தற்போதுள்ள | நட்டங்கள் மற்றும் சேதங்களைக் குறைப்பதற்கு PMU தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2024.05.08 இல் விஜயம் செய்த இடத்தில் சில கீறல்கள் மற்றும் சேதங்கள் காணப்பட்டன. | குழாய்களை மாற்றிய பின்னர் பொருள் தட்டுப்பாடு காரணமாக, வீதி ஒப்பந்ததாரர், அஸ்பால்ற் இடும் பணியை தொடங்கியிருக்கவில்லை. இந்த வீதிப் பகுதி ஏறத்தாழ கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்டதுடன் எந்தவித அடிப்படைக் குறைபாடுகளும் ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அஸ்பால்ற் இடுதலை பயன்படுத்துவதன் மூலம் மேற்பரப்பு திருத்தம் செய்யப்படலாம். | |
| (ஒ) | ஒப்பந்ததாரர் தேவைப்பட்ட இடமாற்றத்தை ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பாக உள்ள போதிலும் இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றில் உள்ள பயன்பாடுகளை மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. மேலும் பயன்பாட்டு இடமாற்றத்திற்கான முன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை, மேலும் அஸ்பால்ற் கொங்கிறீட்டில் ஒப்பந்ததாரரால் சில பழுதுபார்க்கும் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கடுவெல அத்துருகிரிய வீதியின் மின்கம்பங்களை இடமாற்றம் செய்வதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 46 மில்லியன் BOQ தொகையை விஞ்சி ரூபா 106 மில்லியனை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. இது கணக்காய்வில் ஒரு பிரச்சனைக்குரிய சிக்கலாக இருந்தது. | இணங்கப்பட்டது. தெளிவான காணி சுவீகரிப்பு வரை பயன்பாட்டுடன் முன் ஏற்பாடு செய்ய முடியாது. வழக்கமாக, CEB ஒரே நேரத்தில் 10-12 கம்பங்களை (ஒரு பக்கம்) மாற்றுமாறு கோருகிறது, மேலும் அப்பக்கத்தினுள் ஒரு கட்டிடம் இருந்தால் மாற்றுதல் தொடங்காது. எனவே, CEB வரிசைகளின் புதிய தடத்திற்கு அடியில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் அகற்றுவது அவசியமாகும்.<br><br>கேள்வி கட்டத்தில், இதேபோன்ற மற்றொரு செயற்திட்டத்துடன் தொடர்புடைய செலவைக் கருத்தில் கொண்டு PS உருப்படியின் கீழான தொகை வழங்கப்படுகிறது. எனவே, வீதிப் பணிகளை தொடங்கிய பின்னர் பயன்பாட்டு முகவர்களிடமிருந்து (குறிப்பாக CEB) மின்கம்பங்களை இடமாற்றும் போது கிரய முரண் காணப்படுகின்றது. | PMU உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 504 காணித்துண்டுகள் உட்பட 2,747 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், காணி சுவீகரிப்பு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ரூபா 1,564 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2023 திசெம்பர் 31 வரை இழப்பீடு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு வட்டியாக ரூபா 416.55 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 411 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டது.<br>காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் பதிவு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தால் (DSS) மேற்கொள்ளப்படுகிறது. DS அலுவலகத்தில் பதிவு செய்வதில் தாமதம் உள்ளது, அதை பூர்த்தி செய்வதற்கு பல நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br><br>எனினும், 17 ஆம் பிரிவின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவின் பின்னர் நிர்மாண பணிகளுக்கு எந்தத் தடையும் காணப்படவில்லை, மேலும் குறித்த 44 ஆம் பிரிவு பதிவு செயற்திட்ட முன்னேற்றத்தை பாதிப்பதில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறை முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வீதிகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 100 சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு பணிகளில் 83 சதவீதம் மாத்திரமே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது.<br>காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவை பூர்த்தி செய்த காணி சுவீகரிப்பு முன்னேற்றம் 100 சதவீதத்தை அடைந்துகொள்கிறது. காணி சுவீகரிப்பின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் இழப்பீட்டு கொடுப்பனவின் பின்னர் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியும். எனினும், செயற்திட்டப் பிரிவு மூலம் 44 ஆம் பிரிவை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்படும். | காணி சுவீகரிப்பு செயன்முறை முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |